NST Campus

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

தரம் 06	கணிதம்	1.30மணித்தியாலம்

சுட்டிலக்கம் : .... புள்ளிகள்

பகுதி – I

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. 9 மாம்பழங்களின் விலை ரூ. 81 எனின் 4 மாம்பழங்களின் விலை யாது?

....

02. பி.ப 6.45 ஐ நியம நேரத்தில் தருக?

....

03. 43 678 இல் 3 இன் இடப்பெறுமானம் யாது?

....

04. 243 ஐ 3 இன் வலுவாக எழுதுக?

....

05. தரப்பட்ட உருவின் 1cm X 1cm என்ற அளவிடைக்கு ஏற்ப பரப்பளவைக் கணிக்க.

....



06. $20l\ 600ml$ அளவுள்ள பாத்திரத்தினுள் $8l\ 950ml$ நீர் உள்ளது. முற்றாக நிரப்ப இடவேண்டிய நீரின் அளவைக் காண்க.

....

07. இனிப்பு தயாரிப்பின் போது கோதுமை, சீனி, மாஜரின் முறையே 800g, 500g, 200g எனும் அளவில் கலக்கப்படுகிறது.

i. மொத்தத் திணிவைக் காண்க? ....

ii. கோதுமைக்கும், மாஜரினுக்கும் இடையிலான எளிய விகிதத்தை கணிக்க?

....

08. கடிகாரம் காட்டும் நேரத்தை மணி, நிமிடம், செக்கனில் தருக.

....

09. ஏறுவரிசைப்படுத்துக.

0.83, 0.65, 0.6, 0.08, 0.03 - ....

10. 24 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக.

....

11. 12 வது சதுர எண்ணைக் காண்க?

……………………………………………………………………………………………………

12. உருவின் சுற்றளவைக் காண்க.



……………………………………………………………

13. கனவுரு பெட்டியொன்றின்

விளிம்பு : ……………………………………

உச்சி : ……………………………………

முகம் : …………………………………… எண்ணிக்கைகளைக் காண்க?

14. குறித்த எண் ஒன்றை மட்டந்தட்டிய போது 80 கிடைத்தது எனின்,

i. அவ்வெண்ணின் கூடிய பெறுமானம்? ……………………………………………………

ii. அவ்வெண்ணின் குறைந்த பெறுமானம் யாது? ……………………………………………

15. $2^3 \text{ X } 3^2 \text{ X } 4$ இன் பெறுமானத்தைக் காண்க?

……………………………………………………………………………………………………

16. > , < அடையாளமிடுக.

i. $-$ 4 ……….. 0

ii. $-$ 7 ……….. $-$ 10

iii. 7 ………. 3

17. புத்தகம் ஒன்றின் விலை ரூ. a ஆகும். கடைக்குச் சென்ற ரவி இரு புத்தகங்களை வாங்கிய பின் ரூ. 200 வழங்கினால், மீதிப்பணத்தை a இன் கோவையாகத் தருக?

……………………………………………………………………………………………………

18. சரி அல்லது பிழை அடையாளமிடுக.

i. முதலாவது முதன்மை எண் 3 ஆகும். (   )

ii. நான்முகியொன்று 4 முகங்களை கொண்டதாகும். (   )

iii. 90^0 யிலும் குறைந்த கோணம் கூர்ங்கோணமாகும். (   )

iv. வட்டத்திற்கு 10 சமச்சீர் அச்சுக்கள் உள்ளன. (   )

19. பெட்டியொன்றில் 12 சவர்க்காரக் கட்டிகள் வீதம் 360 சவர்க்காரக் கட்டிகளை அடுக்குவதற்கு தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………………………

20. விழாவொன்றின் போது கதிரைகள் நிரலில் 39 உம், நிரையில் 60 உம் கொண்டதாக இடப்பட்டுள்ளது. அங்குள்ள கதிரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………………………

(20 X 2 = 40 புள்ளிகள்)

பகுதி II

01.



a) i. அருகில் தரப்பட்ட வலையுருவைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்மத்தின் பெயரைக் குறிப்பிடுக?

………………………………………………………………………

ii. மேலே கூறப்பட்ட திண்மத்தின் விளிம்பு, உச்சி, முகங்களின் எண்ணிக்கைகளை குறிப்பிடுக?

……………………………………………………………………..

iii. இத்திண்மத்தின் விளிம்பு, முகம் பற்றி உமது கருத்தைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………

iv. நான்முகிக்கான வலையுருவை வரைக.

b) சுருக்குக.

i)

	மணி	நிமிடம்	செக்கன்
	8	45	47
+	5	32	26

(2 + 3 + 2 + 2 + 3 = 12 புள்ளிகள்)

02. a) கடையொன்றில் இடப்பட்ட விலைப்பட்டியல் வருமாறு

அரிசி 1kg	ரூ.250
சீனி 1kg	ரூ.200
தேயிலை1kg	ரூ.160
பருப்பு 1kg	ரூ.120
கோதுமை 1kg	ரூ.300
டின்மீன் 1kg	ரூ.425
வெங்காயம் 1kg	ரூ.260

i. அரிசி 5kg, சீனி 2kg, கோதுமை ½kg வாங்கினால் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது?

…………………………………………………………………

ii. தேயிலை 750g ஐயும், வெங்காயம் 500g ஐயும், டின்மீன் இரண்டும் வாங்கிய ஒருவர் ரூ.1200 ஐ வழங்கினால் அவர் பெறும் மீதித் தொகையைக் கணிக்க.

…………………………………………………………………..

b) 60m நீளமும் 40m அகலமும் கொண்ட செவ்வகத்தின்

i. சுற்றளவைக் காண்க.

……………………………………………………………………………………..

ii. சுற்றளவை cm இல் தருக?

……………………………………………………………………………………..

iii. பரப்பளவைக் காண்க?

……………………………………………………………………………………..

iv. நீள, அகலங்களுக்கிடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

……………………………………………………………………………………..

(3 + 3 + 1 + 1 + 2 + 2 = 12 புள்ளிகள்)

03. a) i. 2kg சீனியைப் பயன்படுத்தி 60 பேருக்கு போதுமான தேநீர் தயாரிக்கலாம் எனின், 480 பேருக்கு தேநீர் தயாரிக்கத் தேவையான சீனியின் அளவைக் காண்க?

....

ii. 1 அமெரிக்க டொலரின் பெறுமதி இலங்கை ரூபாயில் ரூ.210 ஆகும். இத்தினத்தில்,

a) 2500 அமெரிக்க டொலர்களை சம்பளமாக பெற்ற ஒருவரின் தொகையை இலங்கை ரூபாவில் தருக.

....

b) ரூ.42000 ஐ இலங்கையிலுள்ள தனது மகனுக்கு அனுப்பினார் எனின், எத்தனை டொலர்களை அனுப்பியுள்ளார்?

....

b) முஹம்மத் காலையில் பாடசாலை செல்லும் போது அவனது நிழல் அவனின் வலது கைப்பக்கமாக காணப்பட்டது. எனின் அவன் எத்திசை நோக்கி சென்றிருப்பான்.

....

(3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்)

04. 1 தொடக்கம் 20 வரையுள்ள எண் அட்டைகள் காணப்படுகின்றன.

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20

மேலே காணப்படும் அட்டைகளில்

a) இரட்டை எண்கள் : ....

b) முதன்மை எண்கள் : ....

c) சதுர எண்கள் : ....

d) 6 இன் மடங்குகள் : ....

e) 5 ஆல் மீதியின்றி வகுபடுபவை : ....

f) முக்கோணி எண்கள் : ....

(6 X 2 = 12 புள்ளிகள்)

05. ஆடைகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் பல்வேறு பிரிவுகளில் நாள் ஒன்றின் உற்பத்தியானது அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

சட்டை	○○○○○○○○
காற்சட்டை	○○○
தொப்பி	
குழந்தை ஆடைகள்	○○○○○○ ◗
சாரன்	○○○ ◔

○ ஆனது 8 ஐக் காட்டுகிறது

i. அன்றைய தினம் 40 தொப்பிகள் உற்பத்தி செய்யப்பட்டது எனின், அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ii. கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்ட ஆடை வகை எத்தனை? ....

iii. குறைவாக உற்பத்தி செய்யப்பட்ட ஆடை எது? எத்தனை? …………………………………..

iv. உற்பத்தி செய்யப்பட்ட சாரன்களின் எண்ணிக்கையைக் காண்க? ……………………………….

v. காற்சட்டைகளை விட மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட குழந்தை ஆடைகளின் எண்ணிக்கையைக் காண்க.

……………………………………………………………………………………………

vi. அத்தினத்தில் தயாரிக்கப்பட்ட மொத்த ஆடைகளின் எண்ணிக்கையைக் காண்க?

……………………………………………………………………………………………

(2 + 2 + 2 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்)

06. 1) வெற்றிடங்களை நிரப்புக.

a) $\frac{4}{5} = \frac{4}{5}\ X\ \frac{\square}{\square} = \frac{\square}{20}$

b) $\frac{\square}{8} = \frac{\square}{8}\ X\ \frac{2}{\square} = \frac{10}{\square}$

2) போத்தலின் $\frac{1}{3}$ பகுதியளவான கரண்டியினால் 18 கரண்டி நீரைக் கொண்டு எத்தனை போத்தல்களை நிரப்ப முடியும்?

……………………………………………………………………………………………

3) செவ்வக வடிவான 10 சம அளவான காகிதத் தாள்களை ஒன்றன் மீது ஒன்றாக வைத்து சம அளவான 4 கீலங்களாக மடித்து வெட்டப்பட்டன. பின் எத்தனை காகிதக் கீலங்கள் பெறப்பட்டன?

……………………………………………………………………………………………

4) தாங்கியொன்றில் 0.9 பங்கு நீர் உள்ளது. அதில் 0.67 பங்கு நீர் பயன்படுத்தப்பட்டது. எனின், எஞ்சியுள்ள நீர் என்ன பங்கு எனக் காட்டுக?

……………………………………………………………………………………………

(3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்)